ஜீவனுள்ள விசுவாசம்

by Farrell Fisher

President, Macedonian Ministries of Mission

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.
WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

ஜீவனுள்ள விசுவாசம்

by Farrell Fisher
President, Macedonian Ministries of Mission

முழு வேதாகம ஜெப ஐக்கியம்
ஜெய் ராமன் லாரிஷெட் பின்புறம்
செக்போஸ்ட் அருகில்
தன்வந்தரி நகர் போஸ்ட்
பாண்டிச்சேரி - 605 006

தமிழாக்கம்:

பாஸ்டர். **S. ஆனந்த்**

Local contact Address

50, Kannigapuram, Ist Street,
K.K. Nagar, Madras - 600 078.
Phone : 4820820

முன்னுரை

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ''ஜீவனுள்ள விசுவாசம்'' என்ற புத்தகத்தை வாசிப்போருக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சங்கை Farrell Fisher அவர்கள் எழுதியுள்ள இப்புத்தகம் தமிழ் மொழியில் அச்சிடப்பட்டதைக் குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். அவருடைய ஆழ்ந்த கருத்துக்கள் எப்பொழுதுமே கேட்பவர்களுக்கு உள்ளான மனுஷனை பெலப்படுத்தும். தேவனுடைய தாசனாகிய இந்த போதகர் தம்முடைய அனுபவத்தோடு எடுத்துரைக்கும் சிந்தனைகளை நான் பல கருத்தரங்குகளில் கேட்டிருக்கிறேன். மனுஷனுடைய மனதில் மறையாது இடம் பெறச் செய்வதற்கு புத்தகவடிவில் அன்னாரின் கருத்துக்கள் வெளியாகி இருப்பது மிகவும் தேவையே.

'ஜீவனுள்ள விசுவாசம்' என்ற இப்புத்தகம் மெய்யாகவே கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய ஜீவனை கொடுத்து, கிறிஸ்தவ வாழ்க்கையின் மேன்மையை அடையச் செய்யும். நான் இப்புத்தகத்தை வாசித்தபொழுது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். ஏனெனில், பல பாவ பிரச்சனைகளோடும், சூழ்நிலை பிரச்சனைகளோடும் போராடிக்கொண்டிருக்கும் வாலிபர்களுக்கு ஜெயத்திற்கு வழிகாட்டும் ஓர் புத்தகமாக இது அமைந்துள்ளது. இதில் அடங்கியுள்ள அத்தியாயங்கள் அனைத்தும் கவனமாக கைக்கொள்ளுவோமாயின் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையை விசுவாச அஸ்திபாரத்தின் மேல் ஊன்ற கட்டி எழுப்புவதற்கு ஏதுவாகும். இக்கடைசிக் காலங்களில் ஒவ்வொரு விசுவாசியும் கர்த்தருடைய ஊழியக்காரனும் தங்களுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காக படிக்கவேண்டிய புத்தகமே இப்புத்தகம்.

மேலும் சங்கை Farrell Fisher அவர்கள் ஆங்கில கருத்தரங்கு செய்திகள் யாவும் உயர்ந்த நடையில் கூறப்பட்டவைகள். அதே ஆவியோடும், சொல் வன்மையோடும் இப்புத்தகம் பாஸ்டர் ஆனந்த் அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டதைக் குறித்து நான் மகிழ்கிறேன்.

இதை வாசிக்கும் கர்த்தருடைய பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டு கர்த்தரின் வருகைக்கு ஆயத்தமாக இருப்பதற்கு அன்பின் தேவன் அருள்புரிவாராக.

— பாஸ்டர் சாம் சுந்தரம்

அத்தியாயம் - 1

ஜீவனுள்ள விசுவாசத்தின் வல்லமை

ஒரு விசுவாசியினுடைய விசுவாச ஜீவியத்தை நாம் கற்றுக் கொள்ள ஆரம்பிக்கையில், அதற்கு ஆதாரமான ஒரு உறுதியான வேதாந்த அஸ்திபாரத்தை ஆரம்பத்தில் வைக்க விரும்புகின் றேன். இவ் வசனங்கள் உங்களை ஆவிக்குரிய உன்னத ஸ்தானத் தில் நிறுத்தி உங்களையே பரிசீலிக்க உதவி செய்வதாக.

1. ''இயேசு அவளை நோக்கி, நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில் லையா என்றார்''. **யோவான் 11:40.**

    இவ் வசனத்தில் விசுவாசத்தையும், தேவனுடைய மகி மையையும் காணக்கூடிய அதின் கனியை நாம் காண்கின் றோம்.

2. ''விசுவாசித்தவளே பாக்கியவதி; கர்த்தராலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்''. **லூக்கா 1:45**

    இவ்வசனத்தில் விசுவாசத்தையும், தேவன் கூறும் அதன் அஸ்திபாரத்தையும் காண்கின்றோம்.

3. ''ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான்; அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது''. **ரோமர் 4:3**

    இவ் வசனத்தில் விசுவாசத்தையும், அதன் நிறைவேறுத லையும் காண்கின்றோம்.

4. ''நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார்.'' சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக, ''நீர் ஜீவ னுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து'' என்றான். இயேசு அவனை நோக்கி, ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான்; மாம்சமும், இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை; பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்'' என்றார். (மத்தேயு 16:15-17)

இவ்வசனத்தில் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய ராஜரீகத்தை இறந்ததான இரட்சிப்பின் விசுவாசத்தைக் காண்கின்றோம். ''இரட்சிக்கும் விசுவாசம்'' என்பது தேவனால் நமக்கு கொடுக்கப்படுகிற ஈவு.

5. ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்''. ***எபிரேயர் 11:6***

இவ்வசனத்தில் தேவனை பிரியப்படுத்தும் கிரியையோடு கூடிய விசுவாசத்தைக் காண்கின்றோம்.

6. ''இயேசு அவனை நோக்கி; நீ விசுவாசிக்கக் கூடுமானால் ஆகும்; விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்'' என்றார். ''உடனே பிள்ளையின் தகப்பன், விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவி செய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்!'' ***மாற்கு 9:23, 24***

இவ் வசனத்தில் எல்லாவற்றையும் கூடிவரப் பண்ணும் உயிருள்ள விசுவாசத்தைக் காண்கின்றோம்.

7. ''துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும், விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக் கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே'' ***எபிரேயர் 10:22, 23.***

இவ் வசனத்தில், தேவனுடைய உண்மையை மாத்திரம் சார்ந்து நிற்கும் உண்மையுள்ள விசுவாசத்தைக் காண்கின்றோம்.

சார்ல்ஸ் என்ற பிரிட்டிஷ் பிரசங்கியார் **''விசுவாசம் ஓர் ஜெயம் கொள்ளும் கிருபை''** எனக் குறிப்பிட்டார். ஆம், வேதாகம விசுவாசத்தின், ஜெயம் கொள்ளும் கிருபையின் மேலே கட்டப்படும் ஜீவியம் ஒரு வெற்றியுள்ள ஜீவியமே.

''விசுவாசமில்லாத ஒரு மனிதன் நடமாடும் ஓர் எலும்புக் கூடு'' என முந்தைய போப்களில் ஒருவர் குறிப்பிட்டார். அது ஒரு பக்கத்தில் உண்மையாயினும், விசுவாசத்தில் நம்பிக்கை

வைத்து, சொற்ப விசுவாசத்துடன் தன் ஜீவியத்தை நடத்துகிறவனும் ஓர் நடமாடும் எலும்புக் கூடாக இருக்கின்றான்.

யாக்கோபு 2:19-ல் காண்கிறபடி. பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. அவைகளின் விசுவாசத்திலும் ஒரு கிரியையும், ஓர் உணர்வையும் நாம் காணமுடிகிறது.

விசுவாசத்தை நாம் எப்படி விளக்கலாம்; விசுவாசம் என்பது எதிர்பார்க்கின்ற ஓர் விருப்பமோ அல்லது விரும்புகின்ற ஓர் எண்ணமோ அல்ல. அல்லது சாத்தியமான எண்ணத்தை மனோ பாவனையிலே கொண்டு வருவதும் அல்ல; அல்லது, ஒன்று நடக்கும், நடக்காது என்ற வெற்றி - நம்பிக்கையின் எண்ணங்களை தக்க வைக்கும் மூளையறிவுமல்ல.

ஆனால், தேவன் உண்டென்றும் அவர் சொன்ன வார்த்தையுண்மையென்றும் நம்புகின்ற தெய்வீக உணர்வே - உண்மையும், வல்லமையும் நிறைந்த வாழ்க்கையாக மாற்றியமைக்கும் உயிருள்ள விசுவாசமாய் இருக்கிறது.

ஜீவனுள்ள விசுவாசம், வெறும் வாயறிக்கையில் அல்ல; நமக்குள்ளே அதையுடையவர்களாய் அனுபவத்தில் காண்பிப்பதே ஜீவனுள்ள விசுவாசம். அனுபவமற்ற வெற்றறிக்கை வெறும் மாய்மாலமே. சொன்னதை கிரியையில் செயல்படுத்தாத விசுவாசம் விசுவாசமல்லவே. அதைதான் **எபிரேயர் 11:6-ல்** நாம் காண்கின்றோம்.

ஜீவனுள்ள விசுவாசம் வல்லமை நிறைந்ததாய் காணப்படுகிறது. தேவனை இன்னார் என்று விசுவாசிப்பதும், அவருடைய செயலை விசுவாசிப்பதுமே இவ்வல்லமை நிறைந்த விசுவாசமாயிருக்கிறது.

''நீங்கள் ஒரு நடமாடும் எலும்புக்கூடாகவோ அல்லது ஒரு புது சிருஷ்டியாகவோ இருக்கலாம்.''

''நீங்கள் ஒரு பாவமுள்ள ஜனக்கூட்டமாகவோ அல்லது தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாகவோ இருக்கலாம்.''

''நீங்கள் ஒரு முரட்டாட்டமுள்ளவர்களாகவோ அல்லது ஒரு ராஜரீக ஆசாரியக் கூட்டமாகவோ இருக்கலாம்.''

''நீங்கள் கபடு நிறைந்த ஜாதியாகவோ அல்லது பரிசுத்த ஜாதியாகவோ இருக்கலாம்.''

''நீங்கள் உங்களுக்கு சொந்தமானவர்களாகவோ அல்லது அவருக்கு சொந்தமான ஜனமாகவோ இருக்கலாம்.''

''நீங்கள் முற்காலத்தில் அந்நியர்களாகவும், தேவனுடைய கிருபைக்கு தூரமாய் இருந்தவர்களாயும் இருந்து இப்பொழுதோ தேவ பிள்ளைகளாய், அவருடைய கிருபையை பெற்றவர்களின் கூட்டமாகக் காணப்படலாம்.''

உங்களுடைய பூலோக பயணத்தில் சிறந்தவர்களாக காணப்படும்படி எவ்வளவுதான் நீங்கள் போராடினாலும் சமுதாயத்தில் மனிதர்களுடைய நன்மதிப்பை பெற்றவர்களாய் உங்களை எவ்வளவுதான் முன்னேற்றினாலும், தேவ வல்லமையை வெளிப்படுத்தும் ''ஜீவனுள்ள விசுவாசம்'' உங்களில் காணப்படாவிட்டால் அவரை பிரியப்படுத்தவோ அல்லது கனப்படுத்தவோ உங்களால் கூடாது. உறுதியான விசுவாசம் என்னும் உப்பினால் சாரம் ஏற்றப்பட்ட உண்மையான பலியே, தேவ பலிபீடத்தில் அங்கீகரிக்கப்படும் உகந்த பலியாக அமைகிறது.

ஜீவனுள்ள விசுவாசத்தின் வல்லமை என்ன?

I. தேவனால் சொல்லப்பட்ட வார்த்தையின் விலையேறப்பெற்ற தன்மையே, ஜீவனுள்ள விசுவாசத்தின் வல்லமையாயிருக்கிறது. *யோவான் 4:46-50ல்*

உள்ள சந்தர்ப்பத்தை நாம் வாசித்து பார்ப்போம். இப்பகுதியின் முடிவில், ''இயேசு சொன்ன வார்த்தையினை அவன் நம்பி புறப்பட்டுப் போனான்'' என்று நூற்றுக்கு அதிபதியை குறித்து நாம் வாசிக்கின்றோம். சர். தாமஸ் பிரவுன் தன் புத்தகத்தில் எழுதும்போது, ''சாத்தியமானவைகளை விசுவாசிக்கும் போது அது விசுவாசம் அல்ல; ஆனால் அவை வெறும் மனோதத்துவம் '' எனக் குறிப்பிடுகின்றார்.

ஆகவேதான், கொலோசெயர் சபைக்கு பவுல் தன் நிருபத்தை எழுதும்போது'' லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களைக் கொள்ளைக் கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அது மனுஷர்களின்

பாரம்பரிய நியாயத்தையும், உலக வழிபாடுகளையும் பற்றின தேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம், சரீரப் பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது. மேலும், சகல துரைத்தனங்களுக்கும், அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்'' **(கொலோ: 2:8-10)** எனக் குறிப்பிடுகிறார்.

இந்நூற்றுக்கதிபதியினை நாம் காணும்போது, அவன் இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டான்; அவன் அவரிடத்தில் போனான்; அவரை அணுகினான்; அவர் சொன்ன வார்த்தைகளை உற்று கவனித்தான். அவருடைய வார்த்தைகளை வாக்குத்தத்தமாக அங்கிகரித்து, அந்த வார்த்தைகளைத் தனக்கென்றே எடுத்துக்கொண்டான்.

ஜான் ஹால்வீன், ''கிறிஸ்தவ மார்க்கத்தின் கொள்கை'' என்ற தம்முடைய புத்தகத்தில் விசுவாசத்தைப்பற்றி எழுதும் போதும் ''விசுவாசம் என்பது தேவன் நமக்கு நேராய் கொண்டுள்ள அனுகூலத்தின் அறிவும், அதன் பின் தொடர்தலுமே'' என விளக்குகின்றார்.

மேலும் ''விசுவாசத்தின் வல்லமை'' என்ற புத்தகத்தில் ஜான் மார்க் ஆர்தர் கூறும்பொழுது ''இவ்வுலகத்தில் தேவன் சொன்ன வார்த்தையை நம்பி, அதின் அஸ்திபாரத்தின் மேல் ஓர் மனிதன் வாழ்கின்றான். அல்லது தன் சொந்த நோக்கங்களையும், எண்ணங்களையும், அறிவையும், ஆதாரமாக்கி வாழ்கிறான்'' எனக் குறிப்பிடுகின்றார்.

ஸ்பர்ஜன் ''ஒருவன் கிறிஸ்துவின் வார்த்தையை தனது நம்பிக்கையாக அங்கீகரித்து செயல்படுவானாகில், அவன் கன்மலையின் மேல் நிற்கும் வாழ்க்கையை நடத்துகிறான்'' எனக் கூறுகின்றார்.

விசுவாசமானது, ***''ஜெயகரமான ஜீவியம்''*** என்னும் வீட்டை எப்போதும் உண்மையான அஸ்திபாரக்கற்களின் மேல் கட்டி எழுப்புகிறது. தான் அறியாத ஒன்றை ஒருவனும் ஒருபோதும் விசுவாசிக்க முடியாது.

இவ் அஸ்திபாரக்கற்களில் சிலவற்றை நாம் காண்போம்.

1. வெளிப்பாடு என்னும் அஸ்திபாரக்கல்

ரோமர் 10:13-15 வசனங்களை வாசிக்கும்போது தேவ வசனத்தின் வெளிப்பாட்டின் மூலமாய் வருகிற இரட்சிப்பின் கிரியையை பவுல் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தாலே விளக்குகின்றார். தான் அறியாத ஒன்றை, எந்த மனிதனும் விசுவாசிக்க முடியாது என்ற கூற்றை இவ் வசனங்களின் மூலமாய் அவர் வெளிப்படுத்துகின்றார். மேலும் ''வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டு; என்னை குறித்துச் சாட்சி கொடுப்பவைகளும் இவைகளே'' என **யோவான் 5:39-ல்** இயேசு குறிப்பிடுகின்றார்.

2. அங்கீகாரம் என்னும் அஸ்திபாரம்:

''ஏற்றுக்கொள்ளும் அங்கிகரிப்பு இல்லாத வெளிப்பாடு, ஜீவனையல்ல; மரணத்தையே பிறப்பிக்கிறது. அதை இயேசு குறிப்பிடும்போது, **யோவான் 1:11,12-ல்** ''அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ, அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்'' என விளக்குகின்றார்.

அவருடைய வெளிப்படுத்தலை நான் ஏற்றுக்கொள்வதற்கு பதிலாய் அதை புறக்கணிப்பேனாகில், நான் என்னை இரட்சித்தும், எனக்கு ஆசீர்வாதம் கொடுக்கும்படியாக நியமிக்கப்பட்டதுமான ''உன்னத வெளிப்படுத்தலை,'' என்றென்றைக்கும் என்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கும் வெளிப்படுத்தலாக மாற்றிவிடுகிறேன்.

ஆகிலும் ஆவிக்குரியவர்களாகிய நாம் இவ்வெளிப்படுத்தல்களை வேறுபடுத்தாதபடி அவைகளை நம்புகின்றோம்; புறக்கணியாதபடி அங்கீகரிக்கிறோம். முரட்டாட்டம் பண்ணாதபடி அர்ப்பணிக்கின்றோம்; தர்க்கம்பண்ணாதபடி ஏற்றுக்கொள்கின்றோம்; அசட்டைப் பண்ணாதபடி விசுவாசிக்கின்றோம்; கடந்து போகாதபடி அவைகளை மதிக்கின்றோம்.

3. விசுவாசத்தின் இளைப்பாறுதல் என்னும் அஸ்திபாரம்

இரட்சிப்பின் சத்தியத்தைப்பற்றி அதிகமாய் நாம் அறியலாம்; அந்த சத்தியத்தை விசுவாசிக்கவும் செய்யலாம். ஆனால் என் முழு இருதயத்தோடும் அதன் மேல் நான் சாராவிட்டால் இந்த இரட்சிப்பின் கனியை நான் முழுமையாய் அநுபவிக்கமுடியாது. உதாரணமாக, கப்பலில் பயணம் செய்பவன் அது கடலில் மூழ்கும் ஒரு ஆபத்தில் அகப்படும் பொழுது தன்னை மீட்கும் படகின் மேலே நம்பிக்கைவைத்தால்மாத்திரம் போதாது. ஆனால், தான் மூழ்கக்கூடிய சூழ்நிலையில் மூழ்கும் கப்பலைப் பாராதபடி தன்னை மீட்கும் படகின்மீது, தன் கையை வைத்து, அதோடு தன் முழு ஒத்துழைப்பையும் கொடுத்தால் மாத்திரமே பாதுகாக்கப்படுகிறான்.

உயிருள்ள விசுவாசத்தையுடைய ஒருவன் தன்மேலேயே தனக்கு இருக்கும் எந்த நம்பிக்கையையும் வெறுத்துவிட்டு, தன் தேவனுடைய வாக்குத்தத்தத்தை மாத்திரம் சார்ந்து இருக்கின்றான்.

இதைதான் நூற்றுக்கதிபதியின் வாழ்க்கையில் நாம் காண்கின்றோம். நம்பிக்கையற்றதான அவனுடைய தேவையின் பதில் எல்லாம் அவனுடைய சூழ்நிலைக்கு வெளியேதான் இருந்தது. ஆனால் கிறிஸ்துவின் வார்த்தைகளை அவன் கேட்டபொழுதோ முழு விசுவாசத்தோடே செயல்பட்டான். ***(மத்தேயு 8:5-13)***

II. சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் இன்னும் நமது அநுபவத்தில் நிறைவேறாவிட்டாலும் அநுதின ஜீவியத்தில் சமாதானத்தோடு வாழ்வதே ஜீவனுள்ள விசுவாசத்தின் வல்லமையாய் இருக்கிறது.

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. ***(எபி 11:1)***

இயேசு, ''நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கிறான்''. என்று ராஜாவின் மனுஷனிடத்தில் சொன்னவுடனே அவன் விசுவாசித்தவனாய் புறப்பட்டுப் போனான். போகையில்,

அவன் வேலைக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு வந்து உம்முடைய குமாரன் பிழைத்து இருக்கிறான் என்றார்கள். எந்த மணிநேரத்தில் அவனுக்கு சுகம் உண்டாயிற்று என்று அவன் விசாரிக்கையில் ''நேற்று ஏழாம் மணி நேரத்தில் ஜுரம் அவனை விட்டது'' என்றார்கள். **(யோ 4:50-52)**

இராஜாவின் மனுஷன் இயேசுவின் சமூகத்தை விட்டுப் புறப்பட்டு போகையில் அவனுக்கு இருந்ததான மனநிலையை சற்று கவனிப்போம். அவன் புறப்பட தயங்கவில்லை; மனதில் பதட்டமடையவில்லை; இயேசுதான் இவ்வார்த்தைகளை சொன்னாரா என சந்தேகப்படவுமில்லை; அவிசுவாசத்தினால் கலக்கமடையவுமில்லை; போதிய அளவு தனக்கு விசுவாசம் இல்லை என அஞ்சவும் இல்லை.

மாறாக, தான் கேட்டதான வாக்குத்தத்தத்தை அனுபவரீதியாக தான் காணாவிட்டாலும் அதன்மேலே இளைப்பாறுதல் நிறைந்த மன அமைதியோடு செயல்ப்பட்டு, நிச்சயமாய் இயேசு சொன்ன வார்த்தை நிறைவேறிற்று என்ற திருப்தியோடு கடந்து சென்றான்.

நாமும் நமது வாழ்க்கையிலே ''அவருக்குள் நாம் பரிபூரணமுள்ளவர்களாய் இருக்கின்றோம்''. என்ற பவுலின் வாக்கின்படி **(கொலோ 2:10)** விசுவாசத்தில் முன்னேறிச் செல்வோமாக.

சிலருடைய வாழ்க்கையிலே இரட்சிப்பின் வாழ்க்கைக்குள்ளாக அவர்கள் நடந்தாலும் இன்னும் தங்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் சிறிய, பெரிய தோல்விகளில் எல்லாம் பயத்தோடும், சந்தேகத்தோடும், மனகுழப்பத்தோடும் வாழ்கின்றார்கள். எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் அவர்களை ஆண்டுகொள்வதில்லை.

காரணம், வாக்குப் பண்ணினவரைக் காணாதபடி, தங்கள் மேலேயே தங்கள் கண்களைப் பதித்து இருக்கின்றார்கள். இதைதான், கானான் தேசத்தை வேவுபார்க்கச் சென்ற வேவுகாரர் வாழ்க்கையில் காண்கின்றோம். யோசுவாவும், காலேப்பும் வாக்குபண்ணினவர்மேல் தங்கள் கண்களைப் பதிக்கையில், மற்ற பத்துபேரும் சூழ்நிலைகளின் மேலே தங்கள் கண்களைப்பதித்தார்கள். ''நான் உங்களுடனே கூட இருப்பேன்'' என்ற தேவ

வார்த்தையை அவர் காத்துக் கொள்வார் என்று நம்பிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற மூன்று வாலிபர்களும், எரிகிற அக்கினி சூழ்நிலையிலும் அவரோடுகூட நடந்தார்கள். நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்கு பயப்படேன்; தேவரீர் என்னோடுகூட இருக்கின்றீர்; என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும், என்ற வாக்கை சங்கீதக்காரன் அப்படியே நம்பி செயல்பட்டான்.

''என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் இருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்கு சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்'' என்ற வார்த்தையை **யோவான் 16:33-ல்** இயேசு கூறினார். இவ்வசனத்தில் சமாதானத்தின் நோக்கத்தையும், உபவத்திரவத்தின் உண்மையையும், இயேசுவின் ஜெயத்தின் மூலமாய் நமக்கு கிடைக்கும் முழு வெற்றியையும் நாம் அறிகின்றோம்.

III. தாழ்மையுள்ள இருதயத்திலே காணப்படும் கீழ்ப்படிதலை உருவாக்கும் வல்லமையே ஜீவனுள்ள விசுவாசத்தின் வல்லமையாயிருக்கிறது,

''நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்கின்றான்''. ***(யோவான் 4:50)***

இவ்வார்த்தைகளை கேட்ட இராஜாவின் மனுஷன் தன் வழியே திரும்பாமலிருந்திருப்பானேயானால் என்ன நடந்திருக்கும்? தன் ஆசீர்வாதத்தை இழந்து இருப்பான். பேசப்பட்ட தேவ வாக்கு கீழ்ப்படிதலற்ற விசுவாச வார்த்தையா? இல்லவே இல்லை. மாறாக, உண்மையான விசுவாசத்தின் சாட்சியான கீழ்ப்படிதலின் கிரியை என நாம் காண்கின்றோம்.

''அவர்களும் அவர்களின் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாக இருக்கும்படி அவர்கள் எந்நாளும் எனக்கு பயந்து என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்''. ***(உபா 5:29)*** என்ற தேவவார்த்தையை நம் இருதயத்தில் கொண்டு செயல் படுவோமாக.

மேலும் பவுல் தன்னுடைய நிருபத்தை ரோமருக்கு எழுதும்பொழுது ''சகல ஜாதிகளும் விசுவாசத்திற்கு கீழ்ப்படி

யும்படிக்கு அறிவிக்கப்பட்ட ரகசியம்'' எனவும் **(ரோமர் 16:25,26)** குறிப்பிடுகின்றார்.

இவ்வண்ணமாய் ஜீவனுள்ள விசுவாசத்தின் வல்லமை பரிசுத்த தேவனுக்கு முன்பாய் கீழ்ப்படிதல் உள்ள இருதயத் தோடு, பணிந்து கொள்ளும் நிலைமைக்கு நம்மைக் கொண்டு வருகிறது. இயேசு கிறிஸ்துவின் பிரசங்கங்களும், தீர்க்கதரிசிக ளின் வேத வார்த்தைகளும், நித்திய தேவனின் கட்டளைகளும் விசுவாசத்தின் கீழ்ப்படிதலுக்குள்ளே எப்போதும் நம்மை நடத் துகின்றது. மற்ற உபதேசங்கள் அனைத்தும் மாயையே.

IV. அற்புத அடையாளங்கள் நடந்தாலும், நடவாவிட்டாலும் நம்மை கிறிஸ்துவின் சமுகத்தின் பாதையிலே எப்போதும் பாது காக்கக்கூடிய வல்லமையே ஜீவனுள்ள விசுவாசத்தின் வல்லமை யாயிருக்கிறது.

''நீங்கள் அற்புதங்கள், அடையாளங்கள் கண்டாலொழிய என்னை விசுவாசிக்கமாட்டீர்கள்'' (யோ 4:48) என்ற இயேசுவின் வார்த்தைகளை நினைவு கூறுவோம்.

வெறும் அற்புதங்களை மாத்திரம் இராஜாவின் மனுஷன் பெற்றுக் கொள்ள விரும்பாதபடி ''கிறிஸ்து என்னும் அற்புத மே''
அவனுடைய இருதயத்தையும் அவனுடைய சிந்தையையும் ஆட்கொண்டது.

''கிறிஸ்துவே தேவபெலனும், தேவ ஞானமுமாய் இருக்கி றார்'' ***(1 கொரி 1:24)*** என பவுல் கூறுகிறதுபோல ராஜாவின் மனுஷன் ஜீவனுள்ள வார்த்தையாகிய ''இயேசுவை'' கண்டு விசுவாசித்தான். இதை தான் ''ஆண்டவர்தாமே உங்களுக்கொரு '' அடையாளம் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதி யாகி ஒரு குமாரனை பெறுவாள்; அவனுக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவாய்'' என் **'இயேசுவை'**யே அந்த அடையாள மாய் ஏசாயா குறிப்பிடுகின்றார்.

இராஜாவின் மனுஷன் ''கிறிஸ்துவை'' மாம்சத்தில் வந்த தேவனாய் கண்டான். ஆகவேதான், **ஏசா 9:6-ல்** அவர் நாமம் அதிசயமானவர் எனக் காண்கின்றோம். அற்புத அடையாளங் களை மாத்திரம் நம்பி செயல்படாத விசுவாசத்தை ஒரு பக்தன் பின் வருமாறு விளக்குகின்றார்.

''என் விசுவாசம் உம்மை நோக்கி பார்க்கிறது; அவர் என்னை ஆசீர்வாதத்தின் தேசத்தில் உடனடியாய் அழைத்து செல்லாவிட்டாலும், என்னை ஆசிர்வதிக்கிறவரோடே இன்னமும் நான் நடப்பேன். தடைகளை அவர் உடனடியாக தகர்த்துப் போடாவிட்டாலும், விடுதலை அளிக்கிறவரோடு நான் இன்னமும் நடப்பேன். அவர் என்னை தமது பட்டணத்திற்குள்ளே தற்போது நடத்திச் செல்லாவிட்டாலும், பரிசுத்த நகரத்தின் மகத்துவராஜாவோடுகூட நான் இன்னமும் நடப்பேன். அவர் என்னை எரிகிற அக்கினி ஜுவாலையில் இருந்து விடுவியாமல் போனாலும், அதில் நடுவில் உலாவுகிற மகிமையின் கேடகத்தோடு, நான் இன்னமும் நடப்பேன். அவர் என்னை வாழ்க்கைப் புயலில் இருந்து பாதுகாக்காவிட்டாலும், கொந்தளிக்கும் கடல் நடுவே அயர்ந்து நித்திரை செய்யும், புயல் காற்றை நிறுத்துகிறவரோடு நான் இன்னும் நடப்பேன்.'' இவ்வண்ணமாய் விசுவாச வாழ்க்கையிலே அற்புத, அடையாளங்களை தேடாதபடி ''அவர் என்னை கொன்று போட்டாலும், நான் இன்னும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்'' என்ற யோபுவின் வார்த்தைகளை கடைபிடித்து முன்னேறுவோமாக.

V. ஜீவனுள்ள விசுவாசமானது, மற்றவர்களுடைய அவிசுவாசமுள்ள இருதயங்களை ஊடுருவப்பண்ணும் சாத்தியக்கூறான விசுவாசத்தை ஊட்டக்கூடியதாக இருக்கிறது.

''உன் குமாரன் பிழைத்து இருக்கிறான்'' என்று இயேசு சொன்ன மணி நேரம் அதுவே என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டார் அனைவரும் விசுவாசித்தார்கள்''. **லூக்கா 4:33**

இவனுடைய விசுவாசத்தின் மூலமாய் அவனுடைய வீட்டார் அனைவரும் விசுவாசமுடையவர்களானார்கள். அதைதான் ''நான் செய்த யாவற்றையும், அவர் எனக்கு சொன்னார்'' என்ற *(யோவான் 4:39)* சமாரிய ஸ்திரியின் வார்த்தையை விசுவாசித்த சமாரியர் யாவரும் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்தார்கள் எனக் காண்கிறோம்.

ஜார்ஜ் குவிட்வீல்டு தன்னுடைய வாழ்க்கை வரலாற்றில் எழுதும்போது ''நான் இரட்சிக்கப்பட்ட உடனே நான் அறிந்த மற்றவர்கள் அனைவருடைய மனமாறுதலை விரும்பினேன்;

அநேக வாலிபர்களோடு சீட்டாடியும், அருவருப்பான பாவங்களை செய்தும் என் கடந்த வாழ்வை கழித்தேன். ஆகவே நான் இரட்சிப்படைந்தவுடனே அவர்கள் ஒவ்வொருவர் வீட்டிற்கும் சென்று அவர்கள் இரட்சிப்பை பெறுவதை நான் கண்டு, மகிழும் மட்டும் என்னாலே இளைப்பாற முடியவில்லை'' எனக் கூறுகின்றார்.

''சகோதரரே, இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என்னுடைய வாஞ்சையும், நான் தேவனை நோக்கி செய்யும் என்னுடைய ஜெபமாயுமிருக்கிறது என'' ரோமர் 10:1-ல் பவுலின் கதறுதலைக் காண்கின்றோம். இந்தியாவுக்கு நேராய் நமது இருதய கதறுதலும் அவ்வண்ணமாய் இருப்பதாக.

மேலும் ரோமர் 9:3-ல் மாம்சத்தின் படி என் இனத்தாராகிய என் சகோதரருக்கு பதிலாக நானே கிறிஸ்துவை விட்டு சபிக்கப்பட்டவனாக வேண்டுமென்று விரும்புவேனே'' என்ற பவுலின் வார்த்தையைப் போல அழிந்து போகும் மக்கள் மேல் நாம் கொண்டுள்ள நமது பாரமே, ஜீவனுள்ள விசுவாசத்தின் வல்லமையாயிருக்கிறது.

''என் ஆத்துமாவை விசாரிப்பார் ஒருவரும் இல்லை'' *(சங்கீதம் 142:3)* என்ற மனிதக் கதறுதலை நாம் கேட்கையில் அமைதலற்றவர்களாய் இருப்போமாக.

VI. ஜீவனுள்ள விசுவாசத்தின் வல்லமை மற்றவர்கள் காணக்கூடிய வாழ்க்கைப் படத்தை வர்ணிக்கிறதாய் இருக்கிறது.

''நீ போகலாம்; உன் குமாரன் பிழைத்து இருக்கிறான்'' என்று இயேசு சொன்ன வார்த்தையை நம்பிபோனான்.'' *(யோவான் 4:50)*

அவன் சென்றதான் அவரது வழி என்ன?

1. **செவிக்கொடுத்தலின் வழி: *(யோவான் 4:47)*** அந்நியனுடைய சத்தத்திற்கு செவி கொடுக்காதபடி, மெய்யான மேய்ப்பனுடைய சத்தத்திற்கு செவி சாய்க்கும் செவிகள் அவனுக்கு இருந்தது.

2. **தேடுகின்ற இருதயமாகிய வழி. *(யோவான் 4:47)*** அவன் இயேசுவினிடத்தில் சென்றான். நாம் யாரிடத்தில் செல்கின்

றோம்? கர்த்தரைக் கண்டடையத் தக்க சமயத்தில் அவரை தேடுங்கள்'' ஏசா 55:6 ''இது அவரை தேடும் காலமாயிருக்கிறது''. ஏசயா 10:12.

3. **கெஞ்சி விண்ணப்பிக்கின்ற வழி:- (யோவான் 4:47)** அவனை குணமாக்கும்படி அவர் வரும்படி வேண்டிக் கொண்டான்'' ''கேளுங்கள்; அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும். தேடுங்கள், கண்டடைவீர்கள்; தட்டுங்கள், திறக்கப்படும்''. **மத்தேயு 7:7** என்ற இயேசுவின் பொன் மொழிகளை செயல் படுத்துவோமாக.

4. ***சார்ந்து கொள்ளும் வழி:-***

''நீங்கள் மனம் திரும்பி பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால் பரலோகத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்! **(மத் 18:3)** என்ற வாக்கின்படி ஒரு சிறு பிள்ளையைப் போல இயேசுவையே சார்ந்து கொண்டான். ஒரு குழந்தை தன் தேவைக்கு தன் தாய், தந்தையை நம்பி சார்வது போல இந்த ராஜாவின் மனுஷனும் நம்பிக்கையற்ற தன் சூழ்நிலையில் அவரையே சார்ந்துக் கொண்டான்.

5. ***அற்புதத்தின் கிறிஸ்துவை நம்பி, அறிந்து, சரணடைந்த வழி:-*** அனேகர் அற்புதங்களைப் பெற்றும் அற்புதராம் இயேசுவை அறிகிறது இல்லை. அற்புதங்களும், அடையாளங்களும் ''அற்புதராம் இயேசுவாக'' வெளிப்படும் என்பதை அவர்கள் விளங்கிக் கொள்வதில்லை.

இவ்வண்ணம், நாமும் தேவனை விசுவாசித்து அவர் மகிமையை காணும் விசுவாச நடத்தையைக் காண அனுபவத்தோடு ஜீவனுள்ள விசுவாசத்தின் வல்லமையின் வழியில் முன்னேறிச் செல்வோமாக.

அத்தியாயம் - 2

ஜீவனுள்ள விசுவாசத்தின் பொறுமை

"மனுஷ குமாரன் வரும்போது பூமியின் மேல் விசுவாசத்தைக் காண்பாரோ". (லூக்கா 18:8)

இயேசு கேட்டதான இந்த கேள்வியில் நம்முடைய சொந்த நடத்தையைக் குறித்த எழுச்சியூட்டும் சிந்தனையை காண்கின்றோம். நோவாவின் நாட்களில் நடந்தது போல கடைசி நாட்களிலும் நடக்கும்; ஆகவே, ''லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்'' என்று முந்தைய வசனங்களில் குறிப்பிட்டு அதை தொடர்ந்த வார்த்தைகளாக விசுவாசத்தைப்பற்றி கூறுகின்றார்.

நோவாவின் நாட்களில் சொற்ப விசுவாசம் மாத்திரமே இருந்தது; நோவாவும், அவன் குடும்பத்தாரும் மாத்திரமே பூமியின் மேலுள்ள தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கு தப்பினார்கள். அப்படியானால் மனுஷகுமாரனுடைய நாட்களில் விசுவாசத்தை நாம் காணமுடியும். காரணம்:

1. **நாம் விசுவாசத்தினாலே இரட்சிக்கப்பட்டோம். ரோமர் 10:8-10**
2. **நாம் விசுவாசத்தினாலே ஜெயம் பெற்றோம். I யோவான் 5:4**
3. **நாம் விசுவாசத்தினாலே காக்கப்பட்டோம். யூதா 24, 25**
4. **நாம் விசுவாசித்து நடந்தோம். (2 கொரி 5:7)**
5. **நாம் விசுவாசத்தைக் காத்துக் கொண்டோம். II தீமோ 4:7**

ஆகவேதான் ''உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடி உனக்காக வேண்டிக் கொண்டேன்'' என்று இயேசு பேதுருவைப் பார்த்துச் சொன்னார். (லூக் 22:32) இப்பொழுதும் அவர் பிதாவின் வலது பாரிசத்திலிருந்து, நமக்காக பரிந்து பேசிக்கொண்டு

இருக்கிறார். **(யோவா 2:1)** ''தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக அவர்களது விசுவாசம் ஒழிந்து போகாத படி அவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படி எப்போதும் உயிரோடு இருக்கிற ஆசாரியனாய் இருக்கிறார். **(எசா 7:24, 25).**

''நாம் அனைவரும் விசுவாச குடும்பத்தாராய் இருக்கின் றோம்'' என்பதை பவுல் நினைவுபடுத்தி, விசுவாசம் என்னும் கேடகத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டுமென அறிவுரையூட்டுகி றார். (கலா 6:10; எபே 6:16)

விசுவாசத்தில் நாம் நிலைத்து இருந்தால் மாத்திரமே, அனேக உபவத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவே சிக்க முடியும் என பவுல் லீஸ்திரா, இக்கோனியா, அந்தியோகியா பட்டணத்திலுள்ள சீஷர்களுக்கு புத்திசொல்லுகிறார். (அப். 14:21, 22)

நாமும் இங்ஙனம் உபத்திரவங்களின் வழியாய் கடப்ப தற்கு, விசுவாசத்தில் நிலைத்து இருந்தால் மாத்திரமே முடியும். கடுகளவு விசுவாசம் உடையவர்களாய் இருந்தாலும்கூட வல் லமை உள்ள விசுவாசமாய் அது இருந்தால் அவ்விசுவாசத்தின் அளவை கர்த்தர் கனப்படுத்தி, மலைப் போன்ற பிரச்சினைகளி லும் ஜெயம் எடுக்க உதவி செய்கின்றார். **(மத்தேயு 17:20, ரோ 12:3)**

இப்படிப்பட்ட விசுவாசம் ஆவிக்குரிய, பரலோக, நித்திய விசுவாசமாய் தேவனிடத்தில் இருந்து வரும் ஈவாய் இருக்கிறப டியினால், அது வல்லமையுள்ளதாய் இருக்கிறது. ஆகவேதான் **I தெச 3:5-ல்** ''உங்கள் விசுவாசத்தை அறியும்படி அவனை அனுப்பினேன்'' என்று பவுல் சொல்லுகிறார். ''விசுவாசத்தி னால் வராத யாவும் பாவமே'' என்று வேதம் கூறுகிறபடியி னால் தேவன் நமது விசுவாசத்தை அறிய விரும்புகிறார்.

''உங்கள் முகத்தைக் கண்டு உங்கள் விசுவாசத்தின் குறைவு களை நிறைவாக்கும் பொருட்டு உங்களுக்காக வேண்டிக் கொள் ளுகிறேன்'' என்று பவுல் தெசலோனிக்கேயர் சபையை பார்த்து சொல்கின்றார். **(1 தெச 3:10)** அது நம்மை குற்றம் சாட்டும் ஒரு வசனமல்ல; ஆனால் நம்மை உற்சாகப்படுத்தும், நம்பிக்கை யின் வார்த்தைகளாய் இருக்கிறது. பவுல் ஜெபித்தபோது II தெச

1:3-ல், அச்சபையாரின் விசுவாசம் வளர்ந்ததைக் கண்டு அவர் மகிழ்ந்தார்.

இந்த விசுவாசமானது நல் மனசாட்சியோடு இணைந்து செயல்படக்கூடியதொன்றாய் இருக்கிறது. ''இதை நாம் புறக்கணிப்போமானால் ஆபத்துக்குள்ளாவோம்'' என்று I தீமோ 1:19-ல் பவுல் எச்சரிக்கின்றார். மேலும் அவர் குறிப்பிடுகையில் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பொய்யான உபதேசங்களுக்கும் விசுவாசத்தில் நாம் குறைவு படும்போது நாம் நம்மை விட்டுக் கொடுக்கிறோம் என்பதாக எச்சரிக்கிறார். (I தீமோ 4:1, 2) ஆகவே விசுவாசத்தில் உறுதியாய் நின்று, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுவோமாக. எபி 10:22-ல் ''விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடு சேரக் கடவோம்'' என்று உறுதியான விசுவாசத்தில் நிற்கும்படியான சவாலைக் காண்கின்றோம்.

இனி இந்த ஜீவனுள்ள விசுவாசத்தின் பொறுமையை பற்றிய சில குறிப்புகளை கவனிப்போம்.

1. நமது விசுவாசம் வளருகிறது என்பதை நாம் அறிந்து இருக்கின்றோம்.

உங்கள் விசுவாசம் விருத்தியாகும்போது எங்கள் அளவின்படி உங்களால் மிகவும் பெருகி விருத்தியடைவோமென்று நம்பிக்கையாய் இருக்கின்றோம். II கொரி. 10:15

இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும் தேவதயவிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்'' (லூக்கா 2:52)

30 மடங்கு, 60 மடங்கு, 100 மடங்கு என்ற அளவை நாம் விளங்கிக் கொள்ளும் மட்டும் நமக்கு பொறுமை அவசியமாயிருக்கிறது.

நம்மை கிறிஸ்துவுக்குள் விசுவாசத்தில் குழந்தைகள், இளைஞர், பிதாக்கள் என விளங்கிக் கொள்ளும்போது நமக்கு பொறுமை அவசியமாய் இருக்கிறது.

நம்முடைய விசுவாச வாழ்வின் ஆரம்பத்தையும், முடிவையும் எண்ணும்போது பொறுமை நமக்கு அவசியமாயிருக்கிறது. ஆகவேதான் ''நாம் இனி குழந்தைகளாய் இராமல் தலையாகிய

கிறிஸ்துவுக்குள் நாம் எல்லாவற்றிலும் வளர்கிறவர்களாய் இருக்கும்படி'' என பவுல் கூறுகிறார். விசுவாசத்தை துவக்குகிற வரும் முடிக்கிறவருமாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி நாம் முன்னேற நமக்கு பொறுமை வேண்டும். **(எபி 12:2)**

இவ்வண்ணமாய் நமது விசுவாசம் வளர, வளர ஓர் குழந் தைப் பருவத்திலிருந்து ஒரு இளைஞன் வளருவதுபோல மற்ற வர்களின் விசவாசத்தைப் பார்த்தல்ல; நம்முடைய விசுவாசத் தின் வளர்ச்சியிலேதானே முன்னேறிச் செல்ல கர்த்தர் உதவி செய்வாராக. இதற்கான தைரியத்தை நமது விசுவாசத்தோடே கூட்டுவோமாக.

2. பொறுமை நமக்கு அவசியமாயிருக்கிறது

நாம் கொண்டிருக்கும் குறிக்கோள், அடையவேண்டிய இலக்கு இவைகளை ஆரம்பிக்க, எந்த ஒரு கிரயமும் தேவைப்ப டாது. ஆனால் முடிப்பதற்கு முழு கிரயமும் செலுத்தவேண்டும். ஆகவேதான் ''நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும், பாவியும் எங்கே நிற்பான்'' என **I பேதுரு 4:18-ல்** பேதுரு குறிப்பிடுகின்றார் ''முடிவுபரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான் எனவும், ''அனேக உபத்திர வங்கள் வழியாய் நாம் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவே சிக்கவேண்டும்'' எனவும் வேதத்தில் காண்கின்றோம். ஆகவே, ''மிகுந்த பலனுக்கேதுவான நமது தைரியத்தை விட்டுவிடாதி ருப்போமாக''. வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை சுதந்தரிக்கும் படியாக தேவனுடைய சித்தத்தை செய்து பொறுமையோடு விசுவாசத்தில் ஸ்திரப்படுவோமாக.

நமக்கு முன்பாக முன்னோடிகளாய் இருந்த மேகம் போன்ற திரளான சாட்சிகள் நம்மை சூழ்ந்து கொண்டிருக்கிறப டியால், விசுவாசத்தை துவக்குகிறவரும், முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி நமக்கு நியமித்து இருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். ''நம்முடைய ஆத்துமாக்க ளில் விசுவாசப் பரீட்சை வரும்போது, இளைப்புள்ளவர்களாகக்

காணப்பட்டு, சோர்ந்து போகாதபடி பாடுகளை சகித்த இயேசுவை நினைத்துக் கொள்வோம். **(எபி 12:1-3)**

ஆகவே விசுவாச பரீட்சை வருகையில் பொறுமையின் ஆவியையும், விசுவாசத்தின் ஆவியையும் ஒன்றோடொன்று கலந்து ஜெயம் பெற்ற வாழ்க்கையை நடத்திச் செல்வோமாக.

3. உண்மையான விசுவாசம் பரீட்சிக்கப்பட்ட விசுவாசம் என்பதை நாம் அறிகிறோம்.

''நீங்கள் பலவிதமான சோதனையில் அகப்படும் பொழுது உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது, பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாய் இராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது. **(யாக் 1:3-4)**.

தேவன் சிருஷ்டித்தவையெல்லாம் அவர் பரீட்சிக்கிறார் என மறைந்த என் நண்பர் அடிக்கடி சொல்வதுண்டு. ஆகவே தான், அழிந்துபோகின்ற பொன், அக்கினியாலே சோதிக்கப்படும்; அதை பார்க்கிலும் அதிக விலையுயர்ந்ததாகிய உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது, உங்களுக்கு புகழ்ச்சியும், கனமும், மகிமையுமுண்டாகக் காணப்படும். **(I பேதுரு 1:7)** என பேதுரு குறிப்பிடுகின்றார். இதைத்தான் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேல் ஜனங்களின் வாழ்க்கையில் காண்கின்றோம். மேகத்தின் அடியில், சமுத்திரத்தின் ஊடாய் ஆவிக்குரிய மன்னாவை புசித்தவர்களாயும், கன்மலையாகிய கிறிஸ்துவின் அன்பின் பானத்தை பருகினவர்களாயும் இருந்தாலும் விசுவாச பரீட்சையில் தோற்றுப்போனவர்களாய் அவர்களில் அநேகர் அழிக்கப்பட்டார்கள். ''உன் தேவனாகிய கர்த்தர் உன்னை சிறுமை படுத்தும்படிக்கும், உன்னை சோதித்து உன் இருதயத்திலுள்ளதை நீ அறியும்படிக்கும் உன்னை நாற்பது வருஷமாகவும்... பசியினால் வருத்தி, மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, கர்த்தருடைய

வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு..... உன் னைப் போஷித்தார்''. **(உபா 8:3)**

இயேசுவும் **மத் 4-ல்** அதே சோதனையின் பரீட்சையில் கடந்து சென்றார். நம்முடைய தேவன் இருதயங்களையும், சிந்தைகளையும் சோதித்து அறிகிற தேவன் என்பதை மறவாமல் இருப்போமாக.

ஆபிரகாம் விசுவாசத்தினாலே சோதிக்கப்பட்டதுபோல அவனுடைய சந்ததியாகிய நாமும் கிறிஸ்துவின் சுதந்தரராயும், அவருடைய சீஷர்களாயும் சோதிக்கப்படுகையில் நிச்சயமாய் ஆபிரகாமைப்போல ஜெயம் எடுப்போமாக. அவருடைய பூரண சாயலால் நான் தரிப்பிக்கப்படுமட்டும் பொன்னைப் போல புடமிடப்பட்டு, அக்கினி பரீட்சைகள் எல்லாவற்றிலும் ஜெயமெடுத்து வாழ்க்கையில் காணப்படும் எல்லாவித பதரை யும் அகற்றி எனது குழந்தையான விசுவாசத்திலிருந்து முதிர்ச்சி அனுபவத்தை பெற கர்த்தர் அருள்புரிவாராக.

4. உண்மையான விசுவாசத்தின் வல்லமை நம்மைப் பொறுத்திரு என கூறுகின்றது.

''நானோ ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன் மையை காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போ யிருப்பேன். கர்த்தருக்கு காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். திடமனதாய் இருந்து கர்த்தருக்கே காத்திரு''. ***சங். 27:13, 14.*** இவ் வசனத்திலிருந்து கர்த்தருக்கு காத்திருப்பது எத்தகைய உதவிகளை நமக்கு செய்கிறது என கவனிப்போம்.

1. காத்திருக்குதல் நம்பிக்கையை கட்டியெழுப்புகிறது.

''கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள். *சங் 37:9.*

சுதந்திரமொன்று இருக்கிறது என்பதை சிலர் அறியாமல் இருக்கிறார்கள்; சுதந்தரிக்கக்கூடிய தேசம் இருக்கிறது என்பதை

யும் கூட சிலர் அறிகிறது இல்லை. தேவனுடைய வசனத்தில் 7000-த்துக்கும் அதிகமான வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன. அவைகளில் சில தற்போதைய நமது வாழ்வுக்கும், மற்றவைக ளில் சில ஏற்ற காலத்திற்கும், நாளைய தினத்திற்கும் அல்லது விடியற்காலத்திற்கும் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. ஆகவே நம்பிக்கையோடு அவைகள் நிறைவேற நாம் காத்திருக்கவேண் டும்.

2. காத்திருக்குதல் தரிசனத்தை கட்டியெழுப்புகிறது.

'நீ கர்த்தருக்கு காத்திருந்து அவருடைய வழியை கைக் கொள்; அப்பொழுது நீ பூமியை சுதந்தரித்து கொள்வதற்கு அவர் உன்னை உயர்த்துவார்'' ***சங் 37:34***

நாம் உயர்ந்த நிலையில் இருக்கும்படி அவர் விரும்பி செயல்படும்பொழுது, அவர் நமக்காக வைத்திருக்கிற ஆசீர்வா தத்தை நம்பி நாம் காத்திருக்கும்போது அந்த ஆசீர்வாதத்தைக் குறித்த தரிசனத்தை அவர் நமக்கு தருகிறார்.

3. காத்திருக்குதல் சாட்சியை கட்டியெழுப்புகிறது.

''கர்த்தருக்காக பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய் சாய்ந்து என் கூப்பிடுதலைக் கேட்டார்; பயங்கர மான குழியிலும், உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கி யெடுத்து, என் கால்களை கன்மலையில் மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தினார்; நமது தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர் என் வாயிலே கொடுத்தார். அனேகர் அதைக்கண்டு, பயந்து கர்த்தரை நம்புவார்கள். ''இவ்வண்ண மாய் நாம் கர்த்தருக்கு காத்திருக்கும்போது மற்றவர்கள் கண்டு, கேட்டு, அனுபவிக்கக் கூடிய சாட்சியை நமது வாழ்வில் தேவன் உருவாக்குகிறார்.

இதைத்தான் சங்கீதக்காரன் விளக்குகின்றான். ''நான் அவரு டைய வசனத்திற்கு காத்திருக்கிறபடியால் உமக்கு பயந்தவர்கள் என்னைக் கண்டு, சந்தோஷப்படுவார்கள்''. ***சங் 119:74***

''தமக்கு பயந்து, தமது கிருபைக்கு காத்திருக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாய் இருக்கிறார்''.

''கர்த்தருக்கு காத்திருக்கிறவர்களோ புதுபெலன் அடைந்து, கழுகுகளைப் போல் செட்டைகளை அடித்து எழும்பு வார்கள்.

இம்மூன்று வசனங்களில் கூறியிருக்கிறபடி நாம் அனைவரும் அவருடைய வார்த்தைக்கும், அவரது கிருபைக்கும், அவருடைய பலத்திற்க்கும் காத்திருப்போமாக. மேலும் நாம் அவருக்கு காத்திருக்கும்போது, அவருடைய புயத்தினால் வரும் பாதுகாப்பை பெற்றுக்கொள்கிறோம். **ஏசா 51:5.** ''விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தரால் சொல்லப்பட்டவைகள் அவளுக்கு நிறைவேறும்.'' ***(லூக்கா 1:45)***

4. காத்திருக்குதல் விடியற்காலத்தின் சந்தோஷத்தை தருகிறது.

''சாயங்காலத்தில் அழுகை தங்கும்; விடியற்காலத்தில் களிப்புண்டாகும்''. நம்முடைய வாழ்வில் இருளின் பாதையிலே நாம் நடந்து இருப்போமானால், நள்ளிரவின் இருள் நம்மை சூழ்ந்து இருக்குமானால் கவலைப்பட வேண்டாம். ''காத்திரு'' என கர்த்தர் சொல்கிறார். விடியற்காலத்தின் சந்தோஷதொனியை நாம் நிச்சயமாய் கேட்போம்.

5. காத்திருக்குதல் பூமிக்குரிய உபவத்திரங்களினால், வரும் வேதனையிலிருந்து நமக்கு விடுதலை தருகிறது.

''நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாக இருக்கும், கர்த்தரோ அவைகள் எல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார்''. ***சங் 34:19***

இது ஒரு மெய்யான அனுபவம். இதைத்தான் ''அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான உபத்திரவம்'' என பவுல் குறிப்பிடுகின்றார். மேலும் அவரில் நாம் அன்பு கூறும்போது சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறது. கடைசிநாளிலே

''இவர்கள் மிகுந்த உபத்திரவத்தில் இருந்து வந்தவர்கள்; இவர் கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்த்து, வெளுத்தவர்கள்'' என்ற நற்சாட்சியைப் பெற்ற உண்மையான சீஷர்களாக செயல்படுவோமாக. ***(வெளி 7:14)***

6. காத்திருக்குதல் ஆழமான தண்ணீர்கள் மத்தியிலும் தேவ சமூகத்தின் மீதுள்ள திட நம்பிக்கையை நமக்கு கொடுக்கிறது.

''நீ தண்ணீர்களை கடக்கும்போதும் நான் உன்னுடனே கூட இருப்பேன்''. ***ஏசா 43:2***

7. காத்திருக்குதல் அந்தகார சக்திகளின் வல்லமை நம்மைத் தாக்கும் போது அவைகளின் மீது ஜெயத்தைக் கொண்டு வருகி றது.

''என் கிருபை உனக்கு போதும்; பெலவீனத்திலே என் பெலன் பூரணமாய் விளங்கும்''. ***11 கொரி 12:9***

என்ற தேவ வாக்கை பவுல் நம்பி தன் பலவீனங்களிலும் பொறுமையோடு கடந்து சென்று, தன் பலவீனத்தை குறித்து மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுகிறான். அதன் மூலமாய் கிறிஸ்துவின் வல்லமை அவனுக்குள் தங்குகிறது.

இவ்விதமாய் பொறுமையோடு நாம் காத்திருக்கும்போது, எதிர்பார்ப்பின் ஆவியோடு மெய்யான விசுவாசத்தில் வாழ நாம் கற்றுக் கொள்கிறோம். ''செய்வேன் என்று சொன்னவர்'' காலம் எவ்வளவு கடந்து போனாலும் தாம் செய்யவேண்டுவதை நிறைவேற்றாமல் அமர்ந்து இருக்கமாட்டார்.

மலைப்பிரதேசத்தை நான் உனக்கு தருவேன் என்று காலேப்புக்கு தேவன் வாக்குப்பண்ணினார். காலேப் 45 ஆண்டு களாக அவை நிறைவேறுவதற்காக காத்திருந்தான். ஆகவே தான் கர்த்தர் அந்நாளில் சொன்ன இந்த மலைநாட்டை எனக்கு தாரும்'' என யோசுவாவிடத்தில் உறுதியாய் கேட்டான். நாமும் காலேப்பைப் போல, எலியாவைப்போல வாக்குத்தத்தங்களை

நம்பி, கால அளவை காணதப்படி, பொறுமையோடு காத்திருப் போமாகில் நிச்சயமாக அவர் சொன்ன ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். ''உங்களை அழைக்கிறவர் உண்மையுள் ளவர்; அவர் அப்படியே செய்வார்''. I தெச 5:24

5. உண்மையான விசுவாசம் முன்னேறிச் செல்லும் திறந்த விசுவாசமாயிருக்கிறது.

''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து, நான் வெட்கப்ப டேன்; விசுவாசிக்கிறவன் எவனோ, அவனுக்கு இரட்சிப்புண் டாவதற்கு அது தேவ பெலனாய் இருக்கிறது. விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கு என்று அந்த சுவிசேஷத்தி னால் வெளிப்படுத்தப்படுகிறது. இங்கே விசுவாசம் வெளிப்படு வதை நாம் காண்கின்றோம். ''கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன்'' என்ற இயேசுவின் வாக்கின்படி அவர் சொன் னதை நாம் கவனித்து, கேட்டு செயல்படும்போது இன்னும் அதிகமாய் நாம் பெற்றுக்கொள்வோம். மாற்கு 4:23-25. அவரி டத்திலிருந்து அதிகமாய் பெற்றுக்கொள்ளும்போது, அதன்படி நாம் நடப்போமானால் இன்னமும் அதிகமாய் நாம் பெற்றுக் கொள்வோம். இல்லாவிட்டால் உள்ளவைகளும் நம்மைவிட்டு எடுப்பட்டுபோம். விசுவாசத்தின்மேல் விசுவாசத்தையும், மகி மையின்மேல் மகிமையையும், முன்மாரிக்கு பதிலாக பின் மாரியும், முந்தின மகிமைக்கு பதிலாய் பிந்தின மகிமையும் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டு இருக்கிறது. அறுவடையின் முந்தின பலனையும், பிந்தின பலனையும் திறந்த விசுவாசத் தோடு பெற்றுக்கொள்ள பொறுமையோடு காத்திருப்போம்.

6. ஜீவனுள்ள விசுவாசம் அதிகமாக வருங்காலத்திற்கு என தேவைபடுகிறப்படியால் அதற்காக நாம் பொறு மையோடு காத்திருக்கவேண்டும்.

இது மிகவும் முக்கியமான அஸ்திபாரக் கல்லாய், உண்மை யான வேதாந்த விசுவாசத்தின் அறிவாக இருக்கிறது. எல்லாம்

உடனே வேண்டும் என துடிக்கின்ற நவ நாகரிக காலத்தில் நாம் வாழ்கின்றோம்.

நமது அனுதின வாழ்க்கையில் நாம் சந்திக்கிற போராட்டத்தில் சத்துரு வந்து சில வாக்குகளைப் பண்ணி, உப்பரிகையின் உயரத்தில் கொண்டு போகிறான். நம்மை கண்ணிக்கு உட்படுத்தும்படி சிறந்த ஒன்றை தன்னுடையதாகக் காண்பித்து, அழிவின் குழிக்கு நேராய் நம்மை நடத்திச் செல்கிறான். ஆனால் தேவனோ முற்பலன்களை மாத்திரம் ருசிக்க வைத்து, சிறந்தவற்றை இறுதி நாளுக்காக வைத்து இருக்கிறார். தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை. காது கேட்கவுமில்லை; அவைகள் மனுஷனுடைய, இருதயத்தில் தோன்றவுமில்லை. **(I கொரி 2:9)**

ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து சற்றேனும் சந்தேகியாமல் அதை உறுதியாய் நம்பி விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. மேலும், ஆபிரகாம் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார் என்று முழுநிச்சயமாய் நம்பி தேவனை மகிமைபடுத்தி விசுவாசத்தில் வல்லவனானான். **(ரோமர் 4:20 - 22)** பவுலும், ''ஆவியின் முதற் பலனை பெற்ற நாமும் கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வரக்காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கின்றோம். காணப்படுகிறதை நம்புகிறது, நம்பிக்கையல்ல. நாம் காணாததை நம்பினோமாகில் அது வருகிறதற்கு பொறுமையோடே காத்திருப்போம்'' எனத் தெளிவாய் விளக்குகின்றார். **(ரோமர் 8:22-25)** எபி 6:15 -ல் ஆபிரகாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெற்றான் என வாசிக்கின்றோம்.

புதிய ஏற்பாட்டு விசுவாசிகளாகிய கிறிஸ்துவின் சரீரமாகிய நாம் அனைவரும் தேவனால் பேசப்பட்ட ஒவ்வொரு வசனமும் நிறைவேற, வருங்காலத்தைக் குறித்து பொறுமையோடே காத்திருப்போமாக.

''குறித்த காலத்திற்கு தரிசனம் இன்னும் வைக்கப்பட்டு இருக்கிறது; முடிவிலே அது விளங்கும்; அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்கு காத்திரு; அது நிச்சயமாய் வரும்; அது தாமதிப்பதில்லை. **(ஆபகூக் 2:3)**

7. உண்மையான விசுவாசம் முடிவிலே பலன் பெறுகிறதாயிருக்கிறது.

''விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம்; ஏனெனில் தேவனிடத்தில் சேருகிறவன், அவர் உண்டென்றும், தம்மைக் கருத்தாய் தேடுகிறவர்களுக்கு பலன் கொடுக்கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும்.'' **எபி 11:6**

''நீங்களும் நீடிய பொறுமையோடு இருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே'' எனப் பவுல் **யாக் 5:8-ல்** கூறும்பொழுது, பலன் அளிக்கிறவர் கொண்டுவர இருக்கிற பலனை நினைவுப்படுத்துகிறார். அதை தான், இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டு இருக்கிறது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர், அந்நாளிலே அதை எனக்கு தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல அவர் பிரச்சனமாகுதலை விரும்பும் யாவருக்கும் தந்தருளுவார் என பவுல் விளக்குகின்றார்.

அத்தியாயம் - 3

ஜீவனுள்ள விசுவாசத்தின் நல்ல போராட்டம்

ஆவிக்குரிய உலகத்தில் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் காணப்படாத யுத்தம் ஒன்று நடைபெற்று வருகின்றது. தேவனுக்கும், சாத்தானுக்குமிடையும், மாம்சத்திற்கும், ஆவிக்குமிடையும், நன்மைக்கும், தீமைக்குமிடையும், பழைய புதிய மனுஷனுக்கு இடையும் இப்போர் நடந்து கொண்டு இருக்கிறது.

''நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாய் இருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்கள் அல்ல; எங்களுடைய போர் ஆயுதங்கள் - மாம்சத்திற்கு ஏற்றவைகளாய் இராமல், அரண்களை நிர்மூலமாக்க தேவபெலம் உள்ளவைகளாய் இருக்கிறது. அவைகளால் நாங்கள் தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குள் கீழ்ப்படிய சிறைப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம்'' என பவுல், இப்போரை விளக்குகின்றார். II கொரி 10:3-5

ஆகவேதான், நல்ல போராட்டத்தை போராடி, நல் மனசாட்சியோடு விசுவாசத்தைக் காத்துக்கொள்ள அவர் அறிவுறுத்துகின்றார்.

இந்த நல்ல போராட்டத்தை சிலர் போராடாதப்படி விசுவாசமென்னும் கப்பலைச் சேதப்படுத்துகிறார்கள். ஆயினும் நாம் தேவபக்தியாய் நடக்கும்போது உபவத்திரவங்கள் வந்தாலும், அவைகளை மேற்க்கொள்ள, போராடி, ஆவிக்குரிய யுத்தத்தில் முன்னணியில் நின்று நாம் ஜெயம் பெறவேண்டும்.

கிறிஸ்துவின் சரீரமாகிய ஜீவனுள்ள தேவனின் சபை சத்தியத்திற்கு தூணும், ஆதாரமுமாய் இருக்கிறபடியால் இந்த யுத்தத்தில் விசுவாசத்தை நாம் பிடித்துக்கொண்டு மரணம் நேரிடுகிறதாய் இருந்தாலும், அஞ்சாமல் முன்னேறிச் செல்வோமாக.

"உங்களுடைய ஆழமான உணர்வுகளுக்கு எதிராக துரைத்தனங்கள் கிரியை செய்து, நல்ல நாளை மேற்க்கொள்ளும் போது, "யுத்தம் உங்களுடைய அழைப்பு", "சமாதானம் உங்களுடைய எதிர்ப்பு" என்ற நிலையில் சோர்ந்து போகாமல் விசுவாச அக்கினியை அச்சூழ்நிலையில் கொளுத்திவிடுங்கள்" என்று "ஆபிரகாம் கைப்பார்" தனது நூலொன்றில் எழுதுகின்றார்.

யுத்த நாளில் ஆயுதம் அணிந்த வில்வீரரான எப்பிராயீம் புத்திரர் முதுகு காட்டினார்கள் என்று **சங். 78:8-11-ல்** காண்பது போல நாம் இராதபடி ஆவிக்குரிய யுத்தத்தில் தளராது, முன்னேறி செல்வோமாக. யுத்தநாளில் விழிப்புள்ள ஆவியை அற்றவர்கள் - யோனத்தானைப் போலவும், சவுலைப் போலவும் போர்முகத்தில் பராக்கிரமசாலிகள் ஆயினும் வீழ்ந்து விடுகின்றார்கள். **II சாமு 1:25**

யோசேப்பை அறியாத வேறொரு ராஜன் எகிப்திலே தோன்றும்போது, இஸ்ரவேல் புத்திரராகிய ஜனங்கள் நம்மிலும் பலத்தவர்களாய் இருக்கிறார்கள் என்ற மேன்மையான சாட்சியை கர்த்தருடைய ஜனங்களைக் குறித்து கேள்விப்படுகின்றோம். ஆம்! உலகத்தில் இருக்கிறவனைக் காட்டிலும் அவருடைய பிள்ளைகளாகிய நமக்குள் இருக்கிறவர் பெரியவர். அவர் கிறிஸ்து இயேசுவுக்குள் எப்போதும் நம்மை வெற்றி சிறக்கப் பண்ணுகிறவராகையால், நாம் அவருக்குள் முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம் - என்பதை மறந்து போகாமல் இருப்போமாக.

இந்த விசுவாசத்தின் போரைப்பற்றிய முக்கியத்துவங்களை பற்றி சற்று கவனிப்போம்.

I அந்நிய உபதேசங்களும், அந்நிய அக்கினியும் கர்த்தருடைய சபையில் தலை தூக்குகிறபடியால் நாம் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை தொடர்ந்து போராட வேண்டும்.

''பொல்லாதவர்களும், எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவும் இருந்து மேன்மேலும் கேடுள்ளவர்கள் ஆவார்கள்''. **II தீமோ *3:13*** என்ற வாக்கின்படி கடைசி நாட்களில் வேற்றுமையான உபதேசங்களை போதிக்கும்படி வருகிறதான எதிராளிகள் அதிகமாய் இருக்கிறபடியினால் இந்த விசுவாசத்தின் போராட்டத்தில் நாம் தொடர்ந்து போராட வேண்டும்.

நமது ஊழியங்களும், நம்முடைய ஆவிக்குரிய செயல்களும் தேவனுடைய நீதியை வெளிப்படுத்தும்படியாக, விசுவாசத்தில் உறுதியாக இருக்கிறோமா? இல்லையென்றால், இயேசு கிறிஸ்துவின் ஆரோக்கியமான வசனங்களையும், தேவபக்திக்கேற்ற உபதேசங்களையும் ஒப்புக்கொள்ளாத, வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிற வஞ்சகர்களை குறித்தும், பொய்யான தீர்க்கதரிசிகளை குறித்தும், எச்சரிப்போடு இருப்போமாக. தேவன் தங்களை அனுப்பாமல் இருந்தும், அனேகரை வழிதப்பி போக பண்ணுகிறவர்கள் இந்நாட்களில் அனேகர் இருக்கிறார்கள். அதே வேளையிலே நமது விசுவாச சீஷத்துவ வாழ்க்கையில் முன்னேற்றி செல்லும் தேவமனுஷரை அடையாளம் கண்டு, அவர்களோடு ஐக்கியப்படுவோமாக.

ஆகவேதான் ''ஓ! தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை காத்துக்கொண்டு, சீர்கேடான வீண் பேச்சுக்களுக்கும், ஞானம் என்றும் பொய்யாய் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு'' என பவுல் தீமோத்தேயுவை எச்சரிக்கிறார். **I தீமோ. *6:20, 21***

கடைசி நாட்களிலே பொய்யான ஊழியங்களும், பொய்யான தீர்க்கதரிசிகளும் அறிந்தோ, அறியாமலோ கிறிஸ்துவின் மந்தைக்குள்ளே நுழைந்து இருக்கிறபடியினால், செம்மையான பாதையை விட்டு விலகுகிறவர்களுக்கு எதிராக விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை தொடர்ந்து போராட கர்த்தர் நம்மை தட்டி எழுப்புவாராக. ''ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாமல் கேட்கிறவர்களைக் கவிழ்த்து போடுகிறதற்கேதுவான வாக்குவாதம் செய்யாதபடிக்கு, கர்த்தருக்கு முன்பாக அவர்களுக்கு எச்சரித்துப் புத்தி சொல்லு''. **II தீமோ *2:14***

II சத்தியத்தை விட்டு விலகி, சத்தியத்தையும் நல் மனசாட்சியையும் காத்துக் கொள்ளாமல் விசுவாசத்தின் கப்பற் சேதத்தை நாம் சந்திக்க நேரிடுவதால் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைத் தொடர்ந்து போராடவேண்டும்.

''இந்த நல் மனசாட்சியை சிலர் தள்ளிவிட்டு விசுவாசமாகிய கப்பலை சேதப்படுத்தினார்கள்''. **II தீமோ *1:19***

இப்படிப்பட்ட கூட்டத்தினரை இந்நாட்களில் அதிகமாக நாம் காணலாம். ஆவிக்குரிய விசுவாச வாழ்க்கையில் இது மிகவும் ஆபத்தானது. இதைத்தான், கற்பனையின் பொருள் சுத்தமான இருதயத்திலும், நல்மனச்சாட்சியிலும், மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பு என பவுல் குறிப்பிடுகின்றார். இயேசு இக்கூட்டத்தை குறிப்பிடும் போது **லூக் 15:4-6-ல்** காணாமல் போன ஆடாக விளக்குகின்றார். உண்மையான ஒரு மேய்ப்பனின் இருதயம் மந்தையில் உருவாகும் புதிய ஆடுகள் மேலே மாத்திரமல்ல; மந்தையை விட்டு தனித்து அலைந்து திரியும் காணாமல் போன ஆட்டைக் குறித்தும் விழிப்புள்ள இருதயமாயிருக்கிறது.

மேலும் பலவிதமான காற்றினால் அடிப்பட்டு அலைகிற விசுவாசிகள் இக்கப்பற் சேதத்தில் அகப்பட்டு தவிக்கிறார்கள். ஆகவேதான் ஊழியர்களாகிய நாம், சகோதரர்களுக்கு போதித்து

வந்தால் விசுவாசத்திற்குரிய வார்த்தைகளிலும், நாம் அநுசரித்த நற்போதகத்திலும், தேறினவர்களாகி இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரராய் இருப்போமாக. நமது இளமையைக் குறித்து ஒருவனும் நம்மை அசட்டை பண்ணாதபடிக்கு வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு'' என பவுல் திட்டவட்டமாக இப்போரைப்பற்றி ஆலோசனை கூறுகிறார். இங்ஙனம் நாம் சாட்சியோடு, ஜாக்கிரதையாய் ஜீவிப்போமானால் நம்மைக் காத்துக்கொள்வோம். விசுவாசத்தின் கப்பல் சேதத்திற்கு நாம் தப்பலாம். அழிவினின்று நாம் காக்கப்படுகிறோம்.

III ஜெபஜீவியமற்றதும், பரிந்து பேசாததுமான ஜீவியம் நம்மில் காணப்படாதப்படி, விசுவாசத்தின் தொடர் போராட்டம் நமக்கு அவசியமாயிருக்கிறது.

''எல்லா மனுஷர்களுக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.'' **I தீமோ *1:2***

யுத்த காலத்தில் மும்முரமாய் நடக்கிற ஒரு யுத்தத்தில் முன்னணி எப்போதும் உண்டு. அதேபோல ஆவிக்குரிய யுத்தத்திலும் யுத்தத்தின் முன்னணி நமது ஜெப அறையாக இருக்க வேண்டும். எசே *22:30*-யை வாசிப்போமானால் மனிதன் ஜெபிக்க வேண்டும் என்ற தேவனுடைய விருப்பத்தையும், வாஞ்சையையும் நாம் காண்கின்றோம். ''நான் தேசத்தை அழிக்காதப்படிக்கு திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவும் தக்கதாக ஒரு மனுஷனை தேடினேன்; ஒருவனையும் காணேன்.'' என்ற கர்த்தரின் கதறுதல் நமது ஜெபவாழ்க்கையை சற்று திருத்தி அமைப்பதாக. ''ஒருவரும் இல்லையென்று ஆச்சரியப்பட்டார்'' ஏசா *59:16* என்ற வாக்கின்படி நமது விசுவாச வாழ்க்கையில் காணப்படக்கூடாது.

ஒரு தேவ மனுஷனுடைய பிரதானமான ஊழியம், அவன் மற்றவனுக்காக பரிந்து பேசுகிற ஜெபஊழியமே. இராஜாக்க

ளுக்காகவும், அதிகாரத்திலிருக்கிறவர்களுக்காகவும் நாம் ஜெபிக்கும்போதும், எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவேண்டும் என நாம் ஜெபிக்கும்போதும் நமது இரட்சகராகிய தேவனுடைய பார்வையில் அது நன்மையும், பிரியமுமாய் இருக்கிறது. உங்களுடைய ஊழியம் ஜெபத்தில் மூழ்கியிருக்காவிட்டால் தேவனுக்கு முன்பாக அது கனத்திற்குரிய வல்லமையான ஊழியமாய் இருக்க முடியாது. தமது பிதாவாகிய தேவனோடு போதுமான அளவு இயேசு தொடர்பு வைத்தப்படியால் அவருடைய ஊழியம் மாபெரும் வெற்றியாக இருந்தது. சாமுவேலும் ''நான் உங்களுக்காக விண்ணப்பம் பண்ணாவிட்டால் தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்கிறவனாய் இருப்பேன்'' என கூறுகிறார்.

IV தேவனுடைய வீட்டில் தேவன் எதிர்பார்க்கிற ஒழுக்க நடவடிக்கைகளை நாம் கடைபிடிக்க விசுவாசத்தின் தொடர் போராட்டம் நாம் செய்யவேண்டும்.

கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்தில் இதுவும் முக்கியமான தொன்றாய் இருக்கிறது. ஆகவேதான் **I தீமோ** ***3:15***-ல் பவுல் தீமோத்தேயுக்கு அறிவுறுத்தும்போது அதைக்குறித்து தெளிவும், திட்டமுமாய் இருக்கிறார். ''தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படிக்கு இவைகளை உனக்கு எழுதுகிறேன், அந்த வீடு ஜீவனுள்ள தேவனின் சபையாய் சத்தியத்திற்கு தூணும், ஆதாரமுமாயிருக்கிறது.

மேலும் தேவ பக்தியானது எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளதாகையால், தேவபக்திக்கேதுவாய் முயற்சிபண்ணு என, சரீர கட்டுப்பாட்டை குறித்து பவுல் விளக்குகின்றார். அப்படி நாம் வாழும் பொழுது இந்த ஜீவனுக்கும், இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் அது பிரேயோஜனமுள்ளது எனக் கூறுகிறார். பவுல் தேவனுடைய சீஷத்துவப் பாதையில், அவரால் அங்கீகரிக்கப்படாத நிலையில் காணப்பட விரும்பவில்லை. சுவிசேஷத்தில் உடன் பங்காளியாய் ஆகும்படிக்கு, பெற்றுக் கொள்ளத்தக்கதாக

இச்சையடக்கத்தோடே ஓடி இவ்விசுவாச பந்தையத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறான். **I கொரி *9:23 - 29***

மேலும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஒழுங்கீனங்கள் வரும்போது ''ஒருவர் மேலும் சீக்கிரமாய் கைகளை வையாதபடியும், மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதப்படியும் நம்மை சுத்தவான்களாய் காத்துக்கொள்ளும்படி ஜாக்கிரதையாய் இருப்போமாக; மற்றவர்களுக்கு பயம் உண்டாகும்படி பாவம் செய்கிறவர்களை எல்லாருக்கும் முன்பாகவும் நாம் கடிந்து கொள்ளவேண்டும். **I தீமோ *5:22 - 23***

விட்டு விலகி ஓடவேண்டிய காரியங்களைவிட்டு தேவ மனுஷராகிய நாம் ஓடும்போது, நீதியையும், தேவ பக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடி, நாம் அழைக்கப்பட்டதான நித்திய ஜீவனுக்கேதுவாய் அவைகளைப்பற்றிக் கொள்கிறோம்.

நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் என்ற சிந்தை எப்போதும் நமக்குள்ளே ஆழமாய் பதிந்த உண்மையாயிருக்கவேண்டும். இயேசு கிறிஸ்துவின் வருகை பரியந்தம் குற்றம் சாட்டப்படாதவர்களாய் நம்மைக் காத்துக் கொண்டு, பாலிய இச்சைகளுக்கு விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைப் பின்பற்றுவோமாக.

''கர்த்தர் தம்முடையவர்களை அறிவார் என்பதையும், கிறிஸ்துவின் நாமத்தை சொல்லுகிற எவனும், அநியாயத்தை விட்டு விலகக் கடவன் என்பதையும் அதற்கு முத்திரையாயிருக்கிறது. **II தீமோ *2:19*** ஆகவே, தேவனுடைய வீடாகிய நம்முடைய சரீரத்தை ஒழுக்கத்தோடும், பரிசுத்தத்தோடும் காத்துக் கொள்வோமாக.

V நமது அன்றாட பணிதளத்தில் கனத்திற்குரிய கிறிஸ்துவை வெளிப்படுத்தி காண்பிக்க விசுவாசத்தின் நல்ல போராட்டம் நமக்கு தேவையாயிருக்கிறது.

நாம் அனைவரும், போதகர்களும், ஊழியர்களும் அல்ல; வாழ்க்கையில் பகுதி நேரம் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்து, பகுதிநேரம் நமது அன்றாட அலுவல்களில் நம்மில் சிலர் ஈடுபடலாம். ''வேலைக்காரர் யாவரும் தங்கள் எஜமான்களை எல்லா கனத்திற்கும் பாத்திரர் என்று எண்ணிக் கொள்ளக்கடவர் கள். அவ்வேளையில் தேவனுடைய நாமமும் உபதேசமும் தூஷிக்கப்படாது எனப் பவுல் குறிப்பிடுகின்றார். வேலைக்காரர் எனக் கூறும்போது, அரசாங்க வேலையிலும் தனியார் நிறுவ னங்களிலும், தொழில் துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருக்கிற அனைவரையும் அது குறிப்பிடுகின்றது. நாம் வேலை செய்கிற குறிப்பிட்ட இடங்களிலே நமது அதிகாரிகளை நாம் கனம் பண்ணுவது தேவனுடைய நாமத்திற்கு கனத்தையும், மகிமை யையும் கொண்டு வருகிறது.

இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு சீஷனுக்கும் அவர்கள் பணி செய்யும் இடமானது அவருடைய நாமத்தையும், இயேசு விலுள்ள ஆவியையும் வெளிப்படுத்தி, காண்பிக்கக்கூடிய ஒரு இடமாக இருக்கிறது. இது ஒவ்வொரு ஊழியனிடத்திலும் தேவன் எதிர்பார்க்கிற ஆவிக்குரிய உன்னத அழைப்பாயிருக்கி றது. நமது சமுதாயத்தில் கிறிஸ்துவை கனப்படுத்தும் உத்திரவா தம் நம்மிடத்திலே தான் இருக்கிறது. அப்படிப்பட்ட கிரு பையை நாம் கடைப்பிடிக்க விசுவாசத்தில் நல்ல போராட் டத்தை தொடர்ந்து நாம் போராடுவோமாக.

VI நம்முடைய வாழ்க்கையிலே நமது வருமானத்தை குறித்தும், நம்முடைய பொருளாதாரத்தைக் குறித்தும் மனசாட்சியோடு செயல்பட விசுவாசத்தின் நல்ல போராட்டம் அவசியமாகிறது.

அனேக ஊழியங்கள் தேவன் தரும் பணத்தை தவறான நிலையில் உபயோகிக்கிறப்படியினால் நஷ்டமடைந்த நிலை யில் இருக்கின்றன. ஊழியத்தை நடத்த தேவன் பணத்தை நமக்கு ஒரு விக்கிரமாக அல்ல; மாறாக, ஒரு ஆயுதமாக

கொடுத்து இருக்கிறார் என்பதை அநேகர் அறிகிறது இல்லை. ஆகவே இவர்களுடைய இருதயத்தை பண ஆசை ஆட்கொண்டு, இவ்ஆசையினாலேயே, அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தை உயர்த்தாதபடி தூஷிக்கிறார்கள்.

''பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது'' என்ற வசனத்தின்படி விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை செய்யாதபடி தங்களுக்கு தாங்களே தீமையை வருவித்து கொள்கிறார்கள். இதை தான் இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் கூறும்பொழுது ''கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அனேகத்தில் உண்மையுள்ளவனாய் இருக்கிறான். கொஞ்சத்தில் அநீதியுள்ளவன் அனேகத்தில் அநீதியுள்ளவனாய் இருக்கிறான்'' என்றும், அநீதியான உலகப் பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாயிராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள் என்றும், வேறொருவனுடைய காரியத்தில் உண்மையுள்ளவர்களாய் இராவிட்டால் யார் உங்களை நம்பி யாதொன்றையும் சொந்தமாக கொடுப்பார்? எனவும் மூன்று கொள்கைகளை குறிப்பிடுகின்றார்.

அருமை தேவ ஊழியரே! பண விஷயத்திலே நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கின்றோமா? தேவனால் நம்பப்படுகின்ற உண்மையுள்ள உக்கிராணக்காரராய் நாம் செயல்படுகின்றோமா? தேவன் ஒரு ரூபாய் விஷயத்தில் நம்மை நம்ப முடியாவிட்டால் பரலோக ஐசுவரியத்தை, நம்மை நம்பி எப்படி கொடுப்பார்? இதை ஆராய்ந்து விசுவாசத்தில் நல்ல போராட்டத்தை நாம் போராடுவோமாக.

VII நமது சுயத்தின்மேலே நாம் ஜெயம் எடுக்க விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராட வேண்டும்.

தேவன் ஒரு போதும் நம்முடைய திறமையையோ அல்லது நம்முடைய முடியாமையையோ கேட்கிறது இல்லை. ஆனால் நம்முயை அணுகுதலையே அவர் மெய்யாய் எதிர்பார்க்கின்றார்.

''நான் உன் மேல் என் கைகளை வைத்ததினால் உனக்குண்டான தேவ வரத்தை நீ அனல் மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்; தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்து இருக்கிறார்'' என்ற வாக்கின்படி நாம் எப்படி இருக்கிறோம் என்பது அல்ல; ஆகினும் நமது சுயத்திலிருந்து நாம் முற்றிலும் வெளியே வரும்போது, நம்மை தேவன் எப்படி உபயோகப்படுத்த விரும்புகின்றாரோ, அப்படி உபயோகப்படுத்தும்படி நம்மை விட்டுக் கொடுப்போமானால் நம்மில் இருக்கிற மாமிச ஆவியை அவர் முற்றிலும் எடுத்து சத்தியமாகிய நீதியின் ஆவியை தந்து நம்மை உபயோகப்படுத்துகிறார். ஆகவே நம்மில் இருக்கிற பழைய மனுஷனை களைந்து போட்டு, நமக்குள் புதிய மனுஷனை தரித்துக் கொள்வோமாக.

நம் மூலமாய் அவர் தமது மகிமையை வெளிப்படுத்த விரும்புகின்றார். *(II கொரி 1:20)*

VIII மற்ற உண்மையுள்ள மனுஷரிடத்திலே நம்முடைய தரிசனத்தையும், ஜெபத்தையும் ஒப்புவிக்கும்படியாய் விசுவாசத்தின் நல்ல போராட்டம் அவசியமாய் இருக்கிறது.

''அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷரிடத்திலே ஒப்புவி. ஆவிக்குரிய தகப்பனாக நாம் மற்றவர்களின் ஒத்தாசையை நாடவேண்டும். இயேசு ''சீஷர்களாக்குங்கள்'' என்று சொன்னார். நமது சபைகளிலே உண்மையுள்ள மனுஷர்களை கண்டுபிடித்து அவர்களிடத்திலே ஊழிய கிரியைகளை நாம் பகிர்ந்து கொடுக்க நமக்கு விசுவாசம் தேவை. நமது அழைப்பிலே அவர்களுக்கும் பங்கு உண்டு என்பதை நாம் மறந்து போகாமல் இருப்போமாக. இயேசுவும் மூன்று ஆண்டுகள் தம்முடைய ஊழியத்தை செய்து, பின்னர் சீஷர்களிடத்தில் ஒப்பு கொடுத்து சென்றார். அவர்கள் அதை தொடர்ந்து செய்தார்

கள். அப்படிப்பட்ட நிலையிலே நாமும் நம்மை அர்ப்பணித்து தொடர்ந்து போராடுவோமாக.

IX இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்தி காண்பிப்பதே விசுவாசத்தின் நல்ல போராட்டமாயிருக்கிறது.

''தாவீதின் சந்ததியில் பிறந்த இயேசு கிறிஸ்து என் சுவிசேஷத்தின் படியே மரித்தோரில் இருந்து எழுப்பப்பட்டவர் என்று நினைத்துக் கொள்'' **II தீமோ 2:8**

கிறிஸ்து உயிரோடு எழுந்திராவிட்டால், நமது விசுவாசம் வீணாய் இருக்கும் என பவுல் கொரிந்து சபைக்கு கூறுகிறார். இயேசுவின் உயிர்தெழுதலே மற்ற மார்க்கத்தினின்று நம்மை முற்றிலுமாய் பிரிக்கின்றது. ''வழி இதுவே, இதிலே நடவுங்கள்'' என்று அவர் ஒருவராலே மாத்திரம் கூற முடிகின்றது. மேலும் பவுல் குறிப்பிடுகையில், தமது நாமத்தின் நிமித்தம் விசுவாசத்திற்கு கீழ்ப்படியப் பண்ணும் பொருட்டு, எங்களுக்கு கிருபையையும், அப்போஸ்தலர் ஊழியத்தையும் அருளிச் செய்தவர் பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதன் என்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ருபிக்கப்பட்ட தேவகுமாரனாகவுமாயிருந்தார்.'' என அவரை அறிமுகம் செய்கிறார். நாம் பிரசங்கிக்கிற கிறிஸ்துவின் சுவிசேஷம் இயேசுவை தேவன் மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்ற மாபெரும் நற்செய்தியை மாத்திரம் மையப் பொருளாய் கொண்டு உள்ளது. ஆகவேதான் பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது, ''அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையே நான் அறிகிறதற்கு'' எனக் கூறுகிறார். இந்த உயிர்த்தெழுதலின் வல்லமை மாத்திரமே நமது விசுவாசப் போருக்கு பெரும் துணையாய் இருக்கிறது. இந்த வல்லமையை தேவன் நம்முடைய விசுவாச வாழ்க்கையிலும் கட்டவிழ்த்து விடுவாராக.

X தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவி னால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி இந்த விசுவாசத்தின் நல்ல போராட்டம் அவசியமாயிருக்கிறது.

தெரிந்து கொள்ளப்பட்டவர்களாகிய நாம் அவருடைய இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளவேண் டும் என்றால் எப்பேர்பட்ட பாடுகளையும் நாம் சகிக்க ஆயத்த மாயிருக்கவேண்டும். பாடுகளை சகிப்பது ஒரு நல்ல போராட் டம். மனிதனை பின்பற்றாதபடி கிறிஸ்துவை மாத்திரம் நாம் பின் தொடருவோமானால் போர்க்களத்தில் என்ன போராட்டம் வந்தாலும் நாம் நிச்சயமாய் ஜெயம் எடுப்போம்.

XI தேவனுடைய ஊழியங்களில் அவரை உயர்த்தி பிடிக்கும்படி விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை நாம் போராடவேண்டும்.

தேவனுடைய வசனத்தை மாத்திரம் உண்மையாய் அறிவிக் கிற போதகனை தேவன் ஆசீர்வதிக்கிறார். மேலும் பேதுரு கூறும்பொழுது ''தேவனுடைய மந்தையை மேய்த்து'' எனக் குறிப்பிடுகின்றார். ஆத்துமாவுக்கு தேனும், ஜீவனுக்கு அப்பமு மான இந்த வேத வசனத்தை நாம் உயர்த்திப் பிடிக்கும்போது போர் முனையில் வெற்றிப் பெறுகின்றோம்.

வேத வாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப் பட்டதாயும், அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுத லுக்கும், நீதியை படிப்பித்தலுக்கும் எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளதுமாக்குகிறதாயும் இருக்கிறது. இப்படிப்பட்ட வேத வாக்கியங்களை நாம் உயர்த்திப் பிடிப்பதற்கு ''அவைகள் கிடைத்தவுடனே எரேமியாவைப்போல் அவைகளை உட் கொண்டு மனரம்மியமடைவோமாக.

இவ்வண்ணமாய் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை தளகர்த்தர் இயேசுவை முன் வைத்து போராடி எல்லா சூழ்நிலை

களிலும் ஜெயம் எடுத்து அவர் நமக்காக வைத்து இருக்கிற நீதியின் கிரீடத்தை பெற்றுக்கொள்வோமாக. இந்நிலையில் கீழ்க்கண்ட வாக்குத் தத்தத்தினால் கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் தைரியப்படுத்துவாராக.

"கர்த்தரோ எனக்கு துணையாக நின்று என்னை பலப்படுத்தினார். கர்த்தர் எல்லா தீமையினின்று என்னை இரட்சித்து தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்கு சதா காலங்களிலும் மகிமையுண்டாவதாக" ஆமென். II தீமோ *4:16-18.*

NOT FOR SALE